கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 34
புரட்டாசி 9 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# வன்முறைகள் எங்கே முடியப்போகின்றன?

## பாப்பரசரின் பிரலாபம்

சென்றவாரம் பாப்பரசரின் கோடைகால வாசஸ்தலமாகிய கஸ்ரெல் கன்டொல்பாவில் அவரைத் தரிசிக்கச் சென்றவர் மத்தியில் பேசும்பொழுது 6-வது சின்னப்பதந்தை மிகவும் பிரலாபம் நிறைந்தவராகக் காணப்பட்டார். உலகிலே பெருகிக் கொண்டுவரும் வன்செயல்கள் அவர்மனதைத் துன்புறுத்தின என்பது வெளிப்படை. குறிப்பாக அவர் எந்த நாட்டையும சுட்டிக் கூறுதிருந்தும், வட அயர்லாந்து நிலைமையும் நடக்கும் விமானக் கடத்தல்களும், தென் வியற்னும் உயிர்ச்சேதங்களும், மேலும் பெருகிக் கொண்டுவரும் ஆபாசநூல்கள், புகைப்படங்கள் முதலியனயாவும் அவரது கவலைக்குக்காரணங்களாகும். இறுதியாக, "இச்செயல்கள் யாவும் எங்கே நமது உலகை இட்டுச் செல்கின்றன என்பதை யோசிக்கப் பயம் உண்டாகின்றது" என்றார் பாப்பரசர்.

## ஆயருக்கு அமைந்துநடப்பதே முறை

ஒல்லாந்துதேசத்தில் ரோவர்மன்ட் மேற்றிராசனத்தில் பாப்பரசரால் அண்மையில் நியமிக்கப்பட்ட ஆயர் ஜிஜ்சன் அடிகளார் பழையபோக்குடையவரென்று, அவரால் நியமிக்கப்பட்ட விக்கார்ஜெனறல் சுவாமியார் அத்தேசத்திலுள்ள பெரும்பாலான குருமார், ஆயர், விசுவாசிகளால் ஏற்றுக்கொள்ளத் தக்கவரல்லரென்றும் வத்திக்கானுக்கு அத்தேச கருதினல் அல்பிறிங்க் அடிகளார்மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை வத்திக்கான் அதிகாரிகள் முறையற்றதென மதித்துத் தமது அபிப்பிராயத்தை அறிவித்திருக்கின்றனர். தமது மேற்றிராசனத்தின் ஆட்சிக்கு முறையாகநியமிக்கப்பட்ட ஆயரே பொறுப்புடையவர் என்றும், அவரது கவனித்தலுக்கும், குரலுக்கும் குருமார், விசுவாசிகள் யாவரும் அமைந்து நடக்கக் கடமைப் பட்டவர்கள்என்றும் அவர்களது முடிவைக் கூறிவிட்டனர்,

## பாக்கிஸ்தான் புதிய கல்விக்கொள்கைக்கு கிறிஸ்தவர்களின் எதிர்ப்பு

பாக்கிஸ்தான் தேசத்தில் கிறிஸ்தவர்கள் குறைவான தொகையினரா யிருப்பினும், அவர்களால் பல உயர்தர பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனல் சமீபகாலத்தில் அரசாங்கம் அதன் கொள்கையை மாற்றிச் சகல பள்ளிக்கூடங்களையும் சுவீகரித்துக்கொள்ளமுடிவுசெய்து விட்டது. இந்தப் புதிய கொள்கைக்குக் கிறீஸ்தவர்களும் பிறரும் தமது எதிர்ப்பைக் காட்டும்பொருட்டு இஸ்லாம்பாட் நகரத்திலுள்ள ஆட்சிமன்றத்துக்கு ஈராயிரத்துக்கு மேற்பட்டதொகையினர் அணிவகுத்துச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்துக்குத் தடைவிதிக்கப்பட்ட பொழுது அவர்கள் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து நடத்தப் பொலிசார் அவர்களைத் தடிகளால் தாக்கி, துப்பாக்கிப்பிரயோகஞ்செய்ததன்பயனுகச் சிலர் மாண்டனர். ஆயிரத்துக்கு மேலானேர் சிறைப்பட்டனர். நூற்றுக்கணக்கானேர் காயப்பட்டனர்.

# வத்திக்கான் கருத்தரங்கில் பேராசிரியர் மலலசேகர

ஐப்பசிமாதம் முதல்வாரத்தில் வத்திக்கானில் நடக்கஇருக்கும் ஒரு கருத்தரங்கில் இலங்கை பௌத்தசங்க தலைவர் பேராசிரியர் மலலசேகர "செயல்முறையில் பௌத்தம்" என்னும் விஷயம்பற்றி ஒரு சொற்பொழிவாற்றுமாறு அன்பழைப்புப் பெற்றிருப்பதாகவும், அவர் அதை ஏற்றிருப்பதாகவும் அறிகிறோம். பல சமயங்களுடனும் தொடர்பு கொள்ளும் கொள்கை 2-ம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளில் ஒன்றாகும். அதற்கிணங்கவே பல சமயங்களிலும் பேர்போன அறிவாளிகளை வத்திக்கான் அழைத்து அவர்களுடன்நேர்முகமாக உரையாடுகின்றது.

## சுயநலங்கொண்ட மன்றுட்டு ஒரு பெருங் குறை

இவ்வாரம் புரட்டாசி 6-ந் திகதி புதன்கிழமை இலங்கை மலைநாடு மாத்தளைப் பிரிவில் சதாசகாயமாதாவின் வாராதனை தொடர்ச்சியாக நடந்து ஆயிரம் புதன்தினங்கள் நிறைவுபெற்றன. இவ்வைபவம் மிகவும் பக்திச்சிறப்புடன் பல மேற்றிராணிமார், குருமார், பல்லாயிர விசுவாசிகள், சமூகத்தில் நடந்தேறியது. இவ்விழாவுக்கு மக்களைத் தகுந்த ஆன்ம ஆயத்தம்செய்யப் பல பிரயத்தனங்களும் எடுக்கப்பட்டிருந்தன. கண்டி மேற்றிராணியார் இதற்கென ஒரு விசேஷ விண்ணப்பம் மக்களுக்கு விடுத்திருந்தார். இதுவரையும்நடந்து வரும் இப்பக்திமுயற்சியில் அவர் கண்டுகொண்ட ஒரு குறையை இதில் குறிப்பிட்டிருந்தார். எங்கள் மன்றுட்டுக்கள் சுயநலம்கொண்டவைகளாகப் பெரும்பாலும் இருப்பதே அக்குறையாகும். நாம் வசிக்கும் சமூகத்தின் நன்மைக்காக மன்றாடவும், உழைக்கவும் கடமைப்பட்டிருப்பதை அவர் மக்களுக்கு நினைவூட்டி, 2000தின நிறைவுகாண்போர் நாம் பிறர் சிநேகமுள்ள உண்மையான கிறிஸ்தவர்களெனப் பாராட்ட அருகதைஉடையவர்களாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

## சியர்சோலின் (SEAR SoLIN) பற்றி நாம் அறிந்திருப்பது நன்று

ஆசியாவிலும், மறுபகுதிகளிலும் வளர்ச்சியுறுதிருக்கும நாடுகளின் அபிவிருத்திக்காகப் பலவகை முயற்சிகள் நடைபெறுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களும் உண்டு. பிறநாட்டு நிபுணர்கள் உதவி கிடைக்கிறது. இவற்றுள் "சியர் சொலின்" ஸ்தாபன உதவியும் ஒன்றாகும். தென்கிழக்கு ஆசியாவின் கிராமப் பகுதி சமூகத்தலைமைப்பயிற்சி நிலையத்தையே "சியர் சொலின்" என அழைத்து வருகின்றனர். இது ஒரு சர்வகலாசாலை போன்றது. பிலிப்பைன் தேசத்திலே 10 வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டு, யேசுசபைக் குருமாரால் நடத்தப்பட்டு வருகின்றது. தென்கிழக்காசியாவில் சமூகவிழிப்பை உண்டாக்கவும், அதை முறையானபாதையில் கொண்டுநடத்தவும், தலைவர்களைப்பயிற்றுவதே இதன் விசேஷ நோக்கமாகும். இக்கல்லூரியில் பலதேசங்களுக்குரிய கிறிஸ்தவ மாணவர்கள் பயிற்றப்படுகின்றனர், இலங்கையரும் சிலர் பயின்றுவருகின்றனர், வளர்ச்சிபெற்று வரும் இந்தஸ்தாபனம் வருங்காலத்தில் தென்கிழக்காசியாவுக்குத் தேவன்கொடுத்அரும் பெருங் கொடையாகும் என்பது திண்ணம்,

# அந்நியநாட்டுக் குருவானவரைப்போல இந்நாட்டவர் அனைவரும் உழைத்தாலோ — எம். பி.

இலங்கையின் தென்பகுதியில் உள்ள தெகியோவித்த என்னும் பிரிவில் இத்தாலிய தேசப் பிரசையான வண. ஸ்ரெபினுசி சுவாமியார் சமய தொண்டு செய்துவருகிறார், சமயதொண்டு செய்வதுடன் நின்றுவிடாது. இந்நாட்டவரின் சமூக முன்னேற்றத்துக்காகவும் இவர் அயராது உழைத்துவருகின்றார். சென்ற இருவருடங்களாக அப்பகுதியில் இக்குருவானவரின் முயற்சியின் பயனாக இளைஞர் பயிற்சிமன்றம்ஒன்று இயங்கி வருகின்றது. இம்மன்றம் இளைஞருக்குப் பல தொழில் முறைக் கல்விகளையும் பயிற்றி வருகின்றது. சென்றவாரம் இப்பகுதியில் ஒருபுதிய வீதியும், விவசாய பயிற்சிமன்றக் கட்டடமும் திறந்துவைக்கப் பட்டபோது தெகியோவித்த பிரிவின் ஆட்சிமன்ற அங்கத்தவர் தனபால வீரசேகரா அவர்கள் குருவானவரின் சேவையை மிகவும் பாராட்டி, இந்த அந்நியநாட்டுக் குருவானவரைப்போல் இந்நாட்டவரும் தேசப்பற்றுடன் உழைத்துவர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## தலவாக்கலையில் நூற்றாண்டு விழா

மலைநாட்டிலுள்ள தலவாக்கலைப் பட்டினத்தில் புனித பத்திரிசியார் தேவாலயம் நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் இம்மாதம் 17-ந் தேதி நிறைவுபெறுகின்றன. அத்தினத்தை முறையான பக்தி முயற்சிகளுடன் கொண்டாட அப்பகுதிக் கிறீஸ்தவர்கள் ஆயத்தங்கள் செய்துவருகின்றனர். தலவாக்கலைப் பகுதியில் சேவைசெய்து வந்து இன்று நாட்டின் பிற பகுதிகளில் வசித்துவரும் குருமார் பலருடன் கண்டிமேற்றிராணியார் சமூகங்கொடுத்து, கொண்டாட்டங்களில் பங்குபெற்று கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்க முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

# நைஜீரிய சுதேசிகளிடையே தேவ அழைத்தல் பெருகுகின்றது

நைஜீறியாவில் "பயபிரு" என்றழைக்கப்பட்ட பகுதியில 1967—70-ல் நடைபெற்ற உள்நாட்டுக் கலகத்தினல் அங்குள்ள நிலைமை இதுவரையும தெளிவாக அறிந்து கொள்ள முடியாதிருந்தது உண்மையே. ஆனல், வரும் நம்பத்தக்க செய்திகள் கத்தோலிக்கசமயம் இன்றங்கு தழைத்தோங்கி வருவதாகத் தெரிவிக்கின்றன. சுதேசிகளிடையே தேவ அழைத்தலுக்குச் செவிசாய்க்க முன்னிருந்தபயம் நீங்கிவிட்டதனல் பெருந்தொகையாகச் சுதேசிகள் கன்னியர்களாகவும், குருமார்களாகவும் வரமுன்வந்துள்ளனரென அங்கு தொண்டுசெய்துவரும் வண. மக்குவைனஸ் சுவாமியார் அறிவித்திருக்கின்றார். மேலும் நடந்த உள்நாட்டுயுத்தம் கிறிஸ்தவ குருமாருக்கும் கன்னியர்களுக்கும் உரிய மதிப்பை அவர்கள்செய்த பரித்தியாகங்களினல்சுதேசிகளிடையே அதிகரிக்கச் செய்துவிட்டதெனவும் சுவாமியவர்கள் மேலும் கூறியிருக்கின்றார்.

## உலக கிறிஸ்தவ சபைகளின் புதிய செயலாளர்

உலக கிறிஸ்துவ சபைகளின் புதிய செயலாளராக மேற்கு இந்திய தீவுகளில் மெதடிஸ்ற்சபைப் பாதிரியாராகத் தொண்டுசெய்யும் பிலிப்பு பொட்டர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக்காத்து, தன்னைக் கொண்ட கணவரைக் காத்து, தன்குலப் பெருமையினைக் காத்து, கற்பொழுக்கத்தினைக் காத்திடவும் சோர்வடையாதவளே பெண். —திருவள்ளுவர்

சத்தியவேத பாதுகாவலன்

# ஆராதனையும் நவீன மனிதனும்

இன்றைய மனிதன் செயலாற்றலில் நாட்டமுடையவன். இன்றைய வாழ்க்கை வேகத்தில் எத்தனையோ கருமங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவற்றுள் சிக்கித் திணறும் மனிதனுக்கு மூச்சுவிட நேரமில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஆலயத்திற்குச் சென்று ஆராதனையிலோ தியானத்திலோ பொழுதைச் செலவிடுவது வீண் வேலை மினக்கேடாகத் தோன்றலாம். திவ்விய சற்பிரசாதத்தைச் சந்திப்பதாலும் இரவு ஆராதனையாலும் என்ன பயன் என்று மலைக்கலாம். உலகில எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டியிருக்கையில், துன்பத்தையும், பசியையும், அறியாமையையும் நீக்குவதற்கு ஏராளமான உழைப்பு தேவைப்படுகையில், செபத்திலும் ஆராதனையிலும் அதிக நேரத்தைச் செலவிடும் ஒருவர் மனுக்குலத்துக்குப் பயனற்ற விதமாக, தனது சொந்த ஆன்ம வாழ்வை விருத்தி செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார் என்று எண்ணத் தோன்றும். ஆனல், இது சமுதாயத்துக்குப் பயனற்ற ஒரு செய்கையா?

இன்றைய உலகில் நிலவும் எத்தனையோ தீங்குகளுக்குக் காரணம் மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்ளாமையே. ஆராதனை செய்பவர் இறைவனுடைய அதிகாரத்தை ஏற்று அவரை வழிபடுகிறார். ஆகவே, உலக தீங்குகளுக்கான ஒரு காரணத்தையாவது நீக்க அவர் பாடுபடுகிறார். இதனல் கத்தோலிக்க விசுவாசம் உறுதிப்படுகின்றது.

திரு ஆராதனை அதைச் செய்பவருக்கு மட்டுமன்றி முழுத்திருச்சபைக்கும் நன்மை விளைக்கின்றது. சமுதாய உணர்ச்சிவேண்டுமென்றும், மற்றவர்களின்தேவைகளை உணர வேண்டுமெனறும், அவற்றைப் பூர்த்திசெய்ய உழைக்க வேண்டுமென்றும் எங்கும குரலெழுப்பப்படுகின்றது. பிரசங்க மேடைகளிலும், கருத்தரங்குகளிலும், கட்டுரைகளிலும எழுப்பப்படும் இக்கோஷத்தின் பொருளை பிரார்த்தனையில் அனுபவரீதியாக உணரலாம். பிரார்த்தனையில் ஒருவன் தன்னைமட்டும் கருதுவதில்லை. தன் தனி நலனை விட பொதுநலனே மெய்யான செபத்தில் இடம்பெறுகிறது. அயலார், சமூகம், பங்கு, திருச்சபை, நாடு அகில உலகு அனைத்தையும் அவன் செபம் தழுவுகின்றது.

செயலாற்றும்போது ஏற்படும் தோல்விகள், ஏமாற்றங்கள், பிறரின் ஒத்துழையாமை, அல்லது அசட்டை ஆகியவற்றல் வருத்தமுற்றிருப்போருக்கு பயனளிக்கக்கூடிய மருந்து தியானமேயாகும். அதன்மூலம் அவர்கள் புத்தூக்கமும், புதிய நம்பிக்கையும் அன்பும் பெறுவார்கள். அவர்கள் மனதில் இடம் பெற்ற அவநம்பிக்கை, வெறுப்பு, ஏமாற்றம், எல்லாம் நீங்கி அன்பும், துணிவும், தாழ்மையும் அவர்கள் உள்ளத்தில் நிறைந்து, தமது சேவையில் தொடர்ந்து பணியாற்றும் ஆற்றலைப் பெறுவர். விசேஷமாக திருப்பலி பூசையின் பின் மேற்கொள்ளப்படும் ஆராதனை, அப்பலியின் பலன்களை இன்னும் முழுமையாக அடைந்து கொள்வதற்கு உதவுகின்றது.

# சமயத்தைக் கற்பிக்கத் தகுதியுள்ள ஆசிரியர்களே வேண்டும்

புதிய கல்விமுறைத் திட்டத்தில் சமய போதனையின் முறைகளை ஆராயக் கல்வி மந்திரி சபையினரால் சென்ற வாரம் ஒன்றுசேர்க்கப்பட்ட கூட்டத்தில் கொழும்பு அக்குவைனஸ் நிறுவனத்தின் தலைவர் வண. டொன் பீற்றர் சுவாமிகள் எமது நாட்டில் அரசாங்க பாடசாலைகளில் கத்தோலிக்க சமயத்தைக் கற்பிப்பதற்குத் தகுதியற்றோர் சிலர் நியமிக்கப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, சமய அதிகாரிகளினல் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களிடமே அப்பொறுப்பை அளிக்க ஒழுங்குகள் செய்வதே தகுதி என வற்புறுத்தினர்.

# அன்னை பிறந்த பொன்னுள்

பூவுலகில் மானிடர் யாவர்க்கும ஓர் அன்னை; அவர் தான் தேவ அனனை; இறைவனுற் தெரிந்தெடுக்கப்பட்ட அனனை. இவ்வருமையான அன்னையின் பிறந்த நாள், மக்கள் அனைவர்க்கும் ஒரு நன்னுள்; தேவ அன்னையின் மகிமையைப் புகழ்ந்து கொண்டாடிவரும் மாந்தர் எல்லோர்க்கும அஃது ஒரு பொன்னுள்.

ஆதியில் ஆதித்தாய் தந்தையர் அருள் நிலையை இழந்தனர். ஆதலால் மனித அவதாரம் என்னும பரம இரகசியத்தால் மனுக்குலம் மீட்கப்படவேண்டும் என்று இறைவன சித்தமானுர். அதனல இறைவன் ஆதாமின் புதல்விகளுள் மரியாயைத் தெரிந்தெடுத்து அப்பெண்மணியை வானதூதரிலும் மேலாக உயர்த்தி உயர்ந்த மகிமைப் பிரதாபத்திற்கு நியமித்தார்.

இறைவனுக்குத் தாயாக நியமிக்கப்பட்ட அந்தப் பரம விராக்கினி தெய்வீகத்தின் ஆலயமாய் விளங்கும்படி பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவராய் மகிமை பெற்று சகல புண்ணியவரங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்தார்.

இறைவன் மரியாயை மேலான வரங்களால் அலங்கரித்தார். அற்பமாசும் இல்லாமல் உற்பவிக்கும் வரத்தை எல்லாமவல்ல இறைவன் மரியாய்க்கு மட்டும் அளித்திருந்தார். அற்பபாவமும் இல்லாத இஷ்டப்பிரசாத நிலையில் மரியாய் மகிமை நிறைந்த இராக்கினியாய் மூவுலகிற்கும் அரசியாய் விளங்கினுர் இவ்வாறு இறைவனது வரப்பிரசாதங்களால் நிறைந்து சென்ம தோஷமின்றித் தாவீது அரசனின் கோத்திரத்தில் உதித்த புனித ஆனுள் உதரத்தில் உற்பவித்துப் பூவுலகிற் பிறந்தார்.

இவ்வதிசய குழந்தை மாநிலத்தில் உதித்தபொழுது பரலோகத்தில் மிகுந்த போனந்தம். பரமபிதாவுக்கு ஒரு அரிய புத்திரி; அவர் திருச்சுதனுக்கு ஓர் உகந்த ஆலயம்; பரிசுத்த ஆவியின் ஞானப் பத்தினியென மாண்புறத் திகழ்ந்து இலங்க, பரலோகத்திலே தேவகிரீத்துவத்தின மூவரும் திருவரங்களாகிய மலர்களை வானுலகில் நின்றும் மரியாய் என்னும் மகிமை நிறைந்த இராக்கினியின் மீது சொரிந்தனர்.

பூவுலகிற் பிறந்த மரியாயை வானதூதரனைவரும் தங்கள் இராக்கினியாக ஏற்றுப் போற்றினர். மரியாய் என்னும் மகிமை நிறைந்த குழந்தையின் பிறப்பைச் சம்மனசுகள் எல்லோரும் மகா உற்சவமாய்க் கொண்டாடி மகிழ்ந்தனர். அவர்கள் தங்கள் வணக்கத்தையும் நேசத்தையும் காணிக்கை மலர்களாக மாசில்லாத குழந்தைமீது சொரிந்தனர். தேவ திருச்சுதனின் திருத்தாயாகவும மனிதகுலம் அனைத்திற்கும் அரிய அன்னையாகவும பிறந்த குழந்தை மரியாய்க்கு, இறைவன் அளவில்லாத மேலான அருட்கொடைகளை அளித்ததற்காக நாம் அனைவரும் சம்மனசுகளோடு இறைவனைத் துதித்தும் மரியாயைப் புகழ்ந்தும் வாழ்த்துவோம.

ஏவைபுரிந்த தீவினையால் வந்த பாவம் நீங்க, அடிமை இருளகல, பூவுலகில் தேவ ஒளியும் பிரசாத செழுமையும தேங்க, தேவசுதனும ஞானச் சூரியன உதயமாகு முன்னர், உலகினுக் கொளிகொடுக்கும் கதிரவன் தோன்றும் அறிகுறியாய் வானில் உதய தாரகை தோன்றுவது போன்று விடியற்காலத்தின் நட்சத்திரமாக மரியாய் இப்பூவுலகிற் தோன்றினுர்.

ஆசிரியர்: எவ். எஸ். சி.

குழந்தை மரியாய் பரலோக பூலோக அரசியாய் இலங்க, ஆதி சர்ப்பத்தை மாசில்லாத அடிகளால் மிதிக்க, பூவுலகில் யாவர்க்கும் த[illegible]ய்விளங்க, மாசில்லாத வெண்[illegible]லாவைப் போல் சென்மதோஷம் அற்பமுமின்றி உற்பவித்துப் பிறந்தார். மரியன்னையை இறைவன் உலகத்தோர்க்கு வாக்களித்தபொழுது, அந்த அன்னையின் அமல உற்பவத்தைக் குறித்துக் காட்டினுர். மரியாயே அமல உற்பவியாய் இருந்தார். அமல உற்பவத்தைத் தழுவிய மற்றைய வரங்களைப் பற்றியும் இறைவன் முதற் தீர்க்க தரிசனத்தில் அறிவித்திருந்தார். மரியாய் இறைவனின் தாயாய் விளங்குவாரென்றும் மனித இரட்சணிய அலுவலில் அப்பெண்மணி பாம்பின் தலையை நசுக்குவாரென்றும், அந்தத் தீர்க்க தரிசனத்தில் இருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

''உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும அவள் வித்துக்கும் பகையை மூட்டுவேன; நீ அவள் குதிக்காலைத் தீண்டக் காத்துக் கிடப்பாய்'' என்று எல்லாம் வல்ல இறைவன சாத்தானுக்குக் கூறினுர் என்று ஆதியாகமம் கூறுகின்றது. மரியாய் இறைவனுல் மகிமை பெற்றதையும், வரப்பிரசாதங்களையும சுதந்திரங்களையும் அபரிமிதமாய்ப் பெற்றதையும் கண்ட சாத்தான் காய்மகாரம் கொண்டது. மரியாய் என்ற நாமத்தைக் கேட்கவே நரக சர்ப்பங்கள் அஞ்சி நடுநடுங்கும். இத்தகைய மகிமையும் வல்லமையும் உள்ள மரியன்னையிடம் நாமும் முழு நம்பிக்கையுடன் அடைக்கலம் புகுந்து விசேஷமாய் நமது தந்திர சோதனைகளில் அவ்வன்னையைப் பக்தி விநயத்துடன் வேண்டுவோம்.

மரியாய் என்னும் மதுரநாமம் சமுத்திரத்தின் நட்சத்திரம் என்று பொருள்படும். புனித கன்னிமரியாய் இவ்வுலகமாகிய புயல்வீசும் சமுத்திரத்தில் நமக்கொரு நட்சத்திரமாகவும், தீபமாகவும், பிரகாசமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றுர். இப்பூவுலகில் வாழும நாம், நமது ஆபத்து வேளைகளிலும துன்ப துரிதங்களிலும் மரியன்னையை நினைந்து அவ்வன்னையின் ஆதரவைப் பெற முயல்வோம். மரியன்னை மானிடர் அனைவர்க்கும்தாய்; அவ்வன்னையின் மக்களாகிய நாம் நமது உரிமையைப்பெற விரும்பினுல், அவ்வுரிமைக்கு உறைவிடமாகிய தாய்மையை நாம் மதித்துக் கொண்டாட வேண்டும்; ஆதலால் அன்னை பிறந்த பொன்னுளில் அவ்வன்னையின் மக்களாகிய நாம, தேவதாய் நமது தாயாக வந்த மகிமையைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவது நமது கடமையும் உரிமையுமாகும்.

உண்மையாகவே நாம் மரியன்னையின் பிள்ளைகள்; ஆதலால் நாம் அவ்வருமைத் தாய்க்கு உகந்த பிள்ளைகளாக நடத்தல் வேண்டும். சின்னஞ்சிறு குழந்தையைப் போல் நாம நம் தாயை நம்பித் தாயின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து அவ்வன்னையின் பராமரிப்பில் வாழ்வோம்; அவ்வன்னை தான நமக்கு உணவளிக்க வேண்டும்; நமது நோய், பிணி வருத்தம் முதலான துன்பங்களிற் குணமளிக்கவேண்டும்; நமது துயரங்களில் நம்மைத் தேற்ற வேண்டும்; நமது சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும்; வழி தவறும் பொழுது நம்மை நல் வழிப்படுத்தவேண்டும்; எல்லாவற்றிலும் நாம் நமது தாயை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கத். ஆசிரியைகளின் வருடாந்த ஞானெடுக்கம

**காலம்:**

இம்மாதம் 21-ந் தேதி வியாழக்கிழமை பி. ப. 5-30 மணிக்கு ஆரம்பமாகி 24-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மதியபோசனத்துடன் முடிவடையும்.

**இடம்:**

பண்டத்தரிப்பு ஞானெடுக்க இல்லம்.

**போதகர்:**

வண. பிதா யேக்கப் பெர்னண்டோ, S. J. அவர்கள்.

இந்த அருமைச் சந்தர்ப்பத்தில் எல்லோரும் பலன் பெறும்படி அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வண. பிதா
ஜி. ரி. பாலசுந்தரம், O. M. I.,
மறைகல்வி மேற்பார்வையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டன. பாடசாலை செல்லும் சோதர சோதரிகட்கு இம்மூன்றும் தவணை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முக்கிய பரீட்சைகள் எழுத வேண்டிய தவணை இதுவாகும். எனவே, திட்டமிட்டு எமது நேரத்தை வீணாக்காது முயற்சிப்பதன் மூலம் நிச்சயம் வெற்றி பெற முடியும். எமது சொந்த முயற்சி மட்டும் போதாது. இறையருளும் இணைந்தால் மட்டும் பூரண வெற்றி கிட்டும்.

கல்வியுடன் மட்டும் நின்று விடாது சமய, சமூக சேவைகளிலும் சிரமதானப் பணிகளிலும் முன்னின்று இளைஞராகிய நாம் சேவையாற்ற வேண்டும். அப்போதுதான இளைஞராகப் பிறந்த பயனை அடைய முடியும். மீண்டும் அடுத்த இளைஞர் உலகில் சந்திப்போம்.

சோதரன்

## இளைஞர் நேற்று — இன்று — நாளை

தலைப்பைக் கண்டதும் வியப்பு. இல்லை சிரிப்புத் தான் வருகிறது. அன்றும் இன்றும் என்றும் இளைஞர் என்று ஒரு சமுதாயம் இருந்தே வந்தது — வருகிறது வரும். அப்படியானால் அவர்கள் வாழவில்லையா? வாழ்வதில்லையா? வாழமாட்டார்களா?

உண்மை. வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள்; வாழ்வார்கள். அவர்களின் வாழ்க்கை எப்படிப்பட்டதென்பது தான் இன்றைய கேள்வி.

இதுவரை காலமும் இளைஞர் வாழ்ந்தனர். பொறுப்பற்ற நிலையில் இன்றுவரை வாழ்ந்ததினாலே இன்றைய இளம் சமுதாயத்தினர் இழிவான ஒரு நிலைக்குள்ளாயிருக்கின்றனர். ஊக்கமும் ஆக்கமும் இல்லா நோக்கமில்லா வாழ்க்கை வீண்.

இன்றைய இளைஞர் சமுதாயத்தினர், முன்னேற்றம் கருதி எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் தடைபடுகிறது. முன்னேற்றத்திற்கு ஒரு முட்டுக்கட்டை! துடிப்பும் எழுச்சியும் கொண்ட இளைஞரின் ஊக்கமும் ஆக்கமும் பிற சக்திகளால் தாக்கப்படுகிறது.

இன்றுவரை பொறுப்பற்ற நிலையில் வாழ்ந்தவர்கள் பொறுப்பு எது என்பதை உணர்ந்து சேவையில் நாட்டம் கொண்டு விட்டனர். இடையூறுகள் பிரச்சினைகள் தலைதூக்கித் தடுக்க முயன்றாலும் தடையைத் தகர்த்தெறிந்து சேவையாற்றத் துணிந்து விட்டனர். முடங்கிக்கிடந்த சமுதாயம் தவறை உணர்ந்து விட்டது. முட்டுக்கட்டை போட்டவர்கள் தட்டிக் கொடுக்கின்றனர்.

சமூகசேவை, சிரமதானம் போன்ற சமூகப்பணிகளிலும் சமயப் பணிகளிலும் இளைஞர் சிலர் முன்னின்று சேவையாற்றுவதைக் கண்டு இளைஞர் உலகு பெருமையடைகிறது. இளைஞர் அனைவரும் இச் சேவைகளில் ஈடுபடும்காலத்தையும் இளைஞர் உலகு ஆவலுடன் எதிர் பார்க்கிறது.

இன்றைய இளைஞரே நாளைய நாட்டை ஆள்பவர்கள். நற்பிரசைகளை உருவாக்கும் குடும்பத் தலைவர்களும் அவர்களே. இளைஞர் என்ற வகையில் அவர்கள் வாழ்க்கை நல்ல முறையில் அமைந்திருக்குமானால் அவர்களின் எதிர்கால வாழ்வும் நல்ல முறையில் அமையும்; அவர்களின் குடும்ப வாழ்க்கையோ அல்லது துறவற வாழ்க்கையோ சிறந்ததாக அமையும்.

திட்டமிட்ட வாழ்க்கையே இளைஞர் குலத்திற்கு மிகுந்த பயனையும் எதிர் காலத்தில் மகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடியது. எனவே தேடக் கிடைக்காத இப்பருவத்தில் எம்மாலான பணி புரிந்து இளைஞர் உலகிற்குப் பயனும் பெருமையும் ஈட்டுவோமாக.

—திராட்சை யூரான்.

## சிந்தனைக் கதிர்

உலகில் நிச்சயமாகச் சீர் திருத்த வேண்டிய ஒரு பகுதி இருக்கிறது. அது நீங்கள் இருக்கும் பகுதிதான்.

—ஹாக்ஸ்லி

* * *

ஏனையோரின் கடமைகளைச் சுட்டிக்காட்டுமுன் யாவரும் தமது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

—படேல்

* * *

○ ஆபத்து துன்பங்கள் ஏற்படவும் வேண்டும்: அவற்றைத் தீரமாக ஏற்கவும் வேண்டும். அதுவே ஆண்மையின் அழகு.

— ஔரங்கசீப்

* * *

தீய நண்பர், தீய புத்தகம், ஆபாசம் நிறைந்த சினிமா இவற்றுடன் நெருங்கிப் பழகினால் எனது ஏஜண்டுகளாக மாறி விடுவீர்கள்.

—சாத்தான்

## எங்கள் அறிமுகம்

நாம் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஒரு சிசுவைக் குழந்தை என்கிறோம். அதே குழந்தை பதின்மூன்று வயதுக்குட்பட்டிருக்கும் பொழுது சிறுமி அல்லது சிறுவன என்கிறோம். அதே சமயம் பதினான்கிலிருந்து பதினேழு வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர் என்றும் கூறமுடியாது; இளைஞர் என்றும் கூற முடியாது. இந்த வயதை ஆங்கிலத்தில் 'டீன் ஏஜ்" என்று சொல்வார்கள். இந்த வயதுடையோருக்கு ஏதாவது ஒன்றைச் சாதிக்கும் ஆவல் மனதிலிருந்து கொண்டே இருக்கும். தங்களைப் பலபேர் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவார்கள். இதனாலேயே பல இளைஞர்கள் புகைபிடிப்பது, தனியே படம் பார்க்கப்போவது போன்ற பல தீய பழக்க, வழக்கங்களைப் பழகுகிறார்கள். பல இளைஞர்கள் தீயவழிகளால் தங்களைப் பிறர்க்கு அறிமுகப் படுத்திக் கொள்ளாமல், மதத்தொண்டர்களாகப் பாதுகாவலன் மூலம் அறிமுகப்படுத்திக் கொள்ளும் வண்ணம் "எங்கள் அறிமுகம்" என்றொரு பகுதியைப் பாதுகாவலன் ஆரம்பித்து நடாத்துவது பற்றி நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தற்பொழுது எனக்கு வயது பதினாறு. நான் சென்றவருடம் க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையை சிங்களமொழியில் எழுதி சித்தியடைந்துள்ளேன். இந்த வருடம் அதே பரீட்சையைத் தமிழ்மொழியிலும், அடுத்த வருடம் ஆங்கிலமொழியிலும் எழுத உத்தேசித்துள்ளேன். நான் படிக்கும் பாடசாலையில் நல்லொழுக்கத்துக்கும், விளையாட்டிற்குமாகப் பல பரிசுகளைப்பெற்றுள்ளேன். நான் விபரம் தெரிந்த நாட் தொடக்கம் தமிழ் வளர்ச்சிக்கும், மதவளர்ச்சிக்கும் என்னால் முடிந்தவற்றைச் செய்து வருகிறேன். சாதி, சமயம, குலம் ஆகியவற்றால் வேற்றுமை பாராட்டுவதை நான் பூரணமாக வெறுக்கிறேன். இவற்றை ஒழிப்பதற்காகப் பல பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளேன். எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அதிகமாகச் சமூகசேவைகளில் ஈடுபடுகிறேன்.

மிகுதி நேரத்தில் தமிழை வளர்ப்பதற்கும், சமயத்தைப் பரப்புவதற்குமாக ஒரு நாடகக்குழுவை அமைத்துள்ளேன். இக்குழுவிற்கு J. M. J. (JESUS, MARY JOSEPH) எனப்பெயரிட்டுள்ளேன். பதினேழு வயதுக்குட்பட்ட இளைஞர்கள் ஏழு பேரை மட்டுமே கொண்ட இக்குழு இதுவரையில் மூன்று நாடகங்களை வெற்றிகரமாக அரங்கேற்றியுள்ளது. இக்குழுவுக்குத் தலைவன் நான் எனக் கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். J. M. J. நாடகக்குழுவின் நான்காவது நாடகத்தை ஏதாவதொரு தேவாலயத்தில் அரங்கேற்றி கிடைக்கும் வசூலை அந்த ஆலயத்துக்கே வழங்கத் தீர்மானித்துள்ளேன். நான்காவது நாடகமும் வெற்றிகரமாக அமையவும், நான் பரீட்சையில சித்தியடையவும், இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

—நன்றி

ஜே. சகாயநேசன்
பர்னாந்து

158|8, தெமட்டகொட ரோட்,
கொழும்பு—9.

## ஆண்டவரின் சந்நிதியில்...

இன்பப்புகலிடமான இறைவனின் சந்நிதியில்— ஆனந்தம நல்கும் ஆண்டவரின் சந்நிதியில் மனிதனவனும நாடோறும் உறவாடும்போது அவன் உள்ளத்தில் தான் எத்தனை எண்ணங்கள் உதிக்கின்றன. அந்த ஏழையை நான் ஏற்பதா? அந்தக் கல்வியறிவற்றவுடன் நான் கேண்மை கொள்வதா? அந்தப் பாவியுடன் நான் பாசம் கொள்வதா? அந்தத் தாழ்ந்த குலத்தவனுடன் நான் தோழமை கொள்வதா?

ஆம்; இத்தனை குழப்பங்களுக்கும் தீர்வு அளிக்கத் தான் அன்பின் இறைவன் கிறிஸ்து தமது வாழ்வு பூராவும சான்று பகர்ந்தார். ஏழைகளின் தலைவனாக மாட்டுத் தொழுவத்திலே ஏழையாகப் பிறந்தார். தமது வாழ்க்கை பூராவும் எளிய வாழ்க்கை நிகழ்த்தினார். கல்வியறிவற்றவரைத் தமது சீடராக்கித் தமது அன்பைப் பகிர்ந்தார். பாவிகளுக்கு மன்னிப்பளித்துத் தமது இரக்கத்தைக் காட்டினார். நோயாளிகளைத் தழுவிச் சுகமளித்தார். இறுதியில் தாம் கடைப்பிடித்த கொள்கையைத் தம்மைப் பின்பற்றுகிறவர்களும் கடைப்பிடித்துத் தம் பதமடையும்வண்ணம் "அன்புக் கட்டளை"யான "பிறர் சிநேகக் கட்டளை" ஒன்றை ஏற்படுத்தி வெற்றிவீரனாக விண்ணுலகு சென்றார்.

எனவே, அவரைப் பின்தொடரும் நாம், அவர் பதம் சேர ஏங்கி நிற்கும் நாம், அவர் சந்நிதியில் ஏழை-செல்வந்தன், படிக்காதவன்—படித்தவன், பாவி-புண்ணியவான், தாழ்ந்தவன்—உயர்ந்தவன் என்று பாகுபாடு காட்டாது "அன்புக் கட்டளை"யை ஏற்று எல்லோரும் ஒன்றாய் வாழ்வோம். ஆண்டவர் சந்நிதியில் மனிதரனைவரும் சமம்.

செல்வி: தே: பற்றிமா
உடுவில்.

## 'லவ் பண்ணுங்க

ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பே, நாம் கிறீஸ்துவர்கள் என்பதன் அடையாளம். தன்னைப்போல பிறரை எண்ணும் தன்மை வேண்டும் நமக்கு. எதையும் நான், எனக்கு என்னுடையது என்ற சுயநல பாவத்துடன் சிந்திக்காது, நாம், நமக்கு, நம்முடையது என்று பொது நல நோக்குடன் நினைக்கும் மனப்பக்குவம் தேவை. கிறீஸ்துநாதரின் சீவியம் இதைத் தான் நமக்குக் கற்பிக்கிறது.

கிறீஸ்துவர்கள் எனக் கூறிக்கொண்டு, கிறீஸ்துவின் வழியைப் பின்பற்றாது, அவரின் பெயருக்கு களங்கம் விளைவித்துக் கொண்டிருக்கிறோம். தன்னை நிந்தித்தவர்களையும் மன்னித்து அவர்கள் மேல் அன்பு செலுத்தியவர் கிறீஸ்து. ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு, மற்ற கன்னத்தையும் காட்டிய கிறீஸ்துவின் வழிவந்த நாம் செய்வது என்ன?

இந்த அணுயுகத்தில் சமாதானம் என்ற வார்த்தையைக் கேட்பதே அரிதாயிருக்கிறது. ஒரு நாடு மற்றொரு, நாட்டின் மீதும், அண்ணன் தம்பி மீதும், தனயன் தந்தையுடனும் நடத்தும் யுத்தத்தைத் தான் தினமும் செய்திப்பத்திரிகைகளில் படிக்கிறோம்: சகிப்புத் தன்மை இல்லாததே இந்த யுத்தங்களுக்குக் காரணம்: மன்னிக்கும் மனப்பான்மை இல்லாது மற்றவனை வெற்றி கொள்ள வேண்டும் என்ற வெறி இருப்பதனாலேயே அமைதியின்மை ஏற்படுகிறது.

"நான் கிறிஸ்துவை நேசிக்கிறேன். கிறிஸ்தவர்களை வெறுக்கிறேன்" என்றார் காந்தி.

அன்பே உருவான கிறீஸ்துவை நேசிக்கும் காந்தி மகானினால், அவரின் சீஷர்களை நேசிக்க முடியவில்லையாயின், அவர்கள் மற்றவர்கள்மீது கொள்ளாத அன்புதான் காரணமாக இருக்க வேண்டும். இது கிறிஸ்தவர்களான நமக்கு எத்தனை இழுக்கு: கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவரும் கிறீஸ்துவின் உருவங்கள் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டும்: இதற்கு நாம் அயலவர்மீது அன்பு செலுத்த வேண்டும். மற்றவர் துன்பத்தை நம்துன்பமாக நினைத்துநடக்கவேண்டும். எனக்கு இது வேண்டும்என செபிப்பதைவிடுத்து, மற்றவன் வாழ செபிக்க வேண்டும். தன்னை நிந்தித்தவர்களை, மன்னிக்கும் மனப்பான்மையினால், கிறீஸ்துவின் மறு உருவங்களாகத் திகழ வேண்டும்.

வாழ்வும் நாமே, வழியும் நாமே என்று, நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் கிறீஸ்துவின் அடிச்சுவட்டில் வாழ்வோமாக?

செல்வி: வே. பர்னாண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிலுவை வரலாறு

கத்தோலிக்க திருச்சபை வருடத்தின் புரட்டாதி பதினாலாந்திகதி தினத்தில் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளைக் கொண்டாடுகின்றது.

கிறீஸ்துநாதர் கல்வாரி மலைக்குன்றிலே மரணமடைந்தபின் மரித்த சடலத்தைச் சிலுவையினின்று இறக்கி அடக்கம் செய்யப்பட்ட பின்பு அந்தச் சிலுவைமரம் எங்ஙனே அடைந்தது? எந்தக்கதி அடைந்தது என்பது யாருக்கும் புரியவில்லை. அந்தச் சிலுவை மரத்தைப் பற்றி எவருமே அக்கறை எடுக்கவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

"இந்தத் தேவாலயத்தை இடித்துத் தரைமட்டமாக்குங்கள்; மூன்று நாளையில் இதைநான் உயர்த்துவேன்" என்ற உரையினைக் கிறீஸ்து நாதர் செயலாக்கி வெற்றியாக்கி உயிர்த்த சம்பவத்தின் பின்பு சிலுவை மரத்தின் மதிப்பு தெளிவடைந்தது. காலப் போக்கில் கத்தோலிக்க மதத்தில் சிலுவைமரம் ஒரு தனித்துவம் பெற்றது. சுருங்கக் கூறின் "சிலுவையின்றேல் இரட்சணியமில்லை" எனத் திருவாய் மலர்ந்த யேசு மீண்டும் கூறுகின்றார்: "யாராகிலும் எனக்குப் பாத்திரனுகில் தன்சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்பிறகே வரக்கடவான்" என்பதாகும்.

அன்பு–துன்பம் இவற்றின் அரியாசனம் சிலுவை. நாளடைவில் யேசுக்கிறீஸ்துநாதர் அறையுண்டு மரித்த சிலுவை மரம் பலகாலம் தேடுதலுக்குட்பட்டது. இறுதியாக நாலாம் நூற்றூண்டில் தேடுதலுக்குரிய சிலுவைமரம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் கிறீஸ்தவ உலகிற்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. எனவே திருச்சிலுவை உயர்த்தப்பட்ட தினம் ஒரு வரலாற்று நிகழ்ச்சியினை எமக்கு நினைவுறுத்துகின்றது.

அதாவது 614-ம் வருடம் பெல்ஜிய தேசத்தின் அரசன் முப்பெரும்படையைத் திரட்டி மொசப்பத்தோமியா தேசம் சென்று அந்நாட்டை ஜெயித்து எண்ணிடற்கரிய கிறீஸ்தவர்களையும் குருக்கள் கன்னியரையும் வதைத்துக் கொலைசெய்து சுமார் ஒரு இலட்சம் கிறீஸ்தவர்களையும் சிறைப்படுத்தி யூதருக்கு விற்றான். அத்துடன் தேவாலயங்களைக் கொள்ளையடித்து ஜெருசலேமில் இருந்த கிறீஸ்துநாதர் தொங்கி மரித்த திருச்சிலுவையையும் எடுத்துக்கொண்டு தன்தேசம் சென்றான். இதனால் மிகக் கவலையும் துயரமும் கொண்டார் ஏராக்ளியுஸ்.

அங்நாட்களிலே கொன்ஸ்தாந்தி நோப்பிள் புண்ணிய இராயனுன ஏராக்ளியுஸ் என்பவர் அநேக நாட்கள் ஒரு சந்தி பிடித்து செபதபங்களை நடத்தி முடிவில் பெர்சிய தேசத்திற்கு படை எடுத்துச் சென்றார். போரிலே அவ் அரசனை ஜெயித்து 627-ம் வருடம் திருச்சிலுவையை எதிரிகளிடத்தினின்று மீட்டுக்கொண்டு வந்தார். அச்சிலுவையை மீண்டும் கல்வாரிமலையிலுள்ள திருச்சிலுவைக் கோயிலில் ஸ்தாபிக்க விருப்பம் கொண்டார் ஏராக்ளியுஸ்.

எனவே, 629-ம் ஆண்டு புரட்டாசி பதினாலாம் நாளில் விசுவாசிகள் பெரும் கூட்டமாகக்கூடி சங்கீதங்களைப் பாடிக்கொண்டும் செபித்துக் கொண்டும் பக்திப்பவனியாகக் கல்வாரிமலை நோக்கிச் சென்றனர். பவனியின் பின்னணியில் இராயர் ஏராக்ளியுஸ் தமது இராஜ பீதாம்பர ஆடைகளைத் தரித்துக் கொண்டு திருச்சிலுவையைத் தோளின்மீது சுமந்து கொண்டு பாதயாத்திரையாக நடந்து செல்ல முயன்றும் இடைவழியில் அவரால் முடியாமல் போனது.

அப்போது மேற்றிராணியாரான அதிவண. சக்கரி என்பவர் இராயனைப்பார்த்து, "இராஜேந்திரனே! கர்த்தர் நிந்தை அவமானத்துடன் சுமந்துசென்ற சிலுவையை நீ கோர்த்தியான உடுபாவனையுடன் சுமந்துசெல்வது சரியல்ல" என்றார். உடனே இராயர் தனது ஆடம்பர உடைகளைக் களைந்துவிட்டு ஏழைக்குரிய வஸ்திரத்துடன் எளிதாய்ச் சுமந்து கொண்டுபோய் கல்வாரியிலுள்ள திருச்சிலுவைத் தேவாலயத்திலே ஸ்தாபித்தார். மக்கள் வியப்பும் பேரதிசயமும் அடைந்ததுடன் அடிபணிந்து திருச்சிலுவையை முத்திசெய்தனர்.

ஜெருசலேமில் யேசுவின் திருப்பாடுகள் ஞாபகமாக எழுப்பப்பட்டுள்ள திருச்சிலுவைத் தேவாலயத்தில் உண்மைச் சிலுவையில் ஒரு பெரிய துண்டும் திரு ஆணியும் திருமுள்முடியின் முள்ளும் எபிரேயு கிரீக்கு இலத்தின் ஆகிய மும்மொழிகளில் யேசுவின் பட்டம் தீட்டப்பட்டு சிலுவையின்மீது வைக்கப்பட்டிருந்த பலகையும் அவருடைய திரு இரத்தத்தில் தோய்ந்த கல்வாரியின் மண்ணும் திருப்பாடுகளின் நீங்காத விளைவின் சின்னங்களாக இன்றும் உள்ளன. யேசுநாதர் மரித்த சிலுவை மரத்தில் நாளடைவில் சிறு துண்டுகள் ஒடிக்கப்பட்டு பலமுக்கிய தேவாலயங்களுக்குக் கொண்டு போகப்பட்டன. இவ்வாறு திருச்சிலுவையின் துண்டுகள் உள்ள தேவாலயங்களில் பெரிய வெள்ளிக்கிழமை அன்று திருச்சிலுவை ஆராதனை நடைபெறும்.

இந்தியாவின் மணப்பாட்டில் அமைந்த திருச்சிலுவைத் தேவாலயத்திலும் மற்றும் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள திருச்சிலுவைத் தேவாலயங்களிலும் புரட்டாசி 14-ந் திகதி "திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்" விசேட விழாவாகக் கொண்டாடப்படும்.

—காமல் இக்னேஷியஸ்

---

✝

**வண. ஜே. நீக்கலஸ் சுவாமி அவர்கள்**

அமரத்துவமடைந்த

## முதல் வருட ஞாபகம்

தோற்றம்: 24-3-1906

மறைவு: 8-9-1971

முந்த யாழ். மேற்றிராசனத்திலும், பின்னர் திருகோணமலை மேற்றிராசனத்திலும் திருஊழியம் புரிந்து சென்ற 8 9-71இல் காலஞ்சென்ற வண பிதா ஜே. நிக்கலஸ் அவர்களின் முதல் வருட நிறைவுதினம் 8-9-72-ல் பூர்த்தியடைகிறது. இவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்

பிரிவால் துயருறும்:

சகோதரிகள், மருமக்கள், மற்றும் இனபந்துக்கள்.

235, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

**சங். சகோ.**

**V. பேதுருப்பிள்ளை, S.S.J.**

**அவர்களின்**

**ஆன்ம இளைப்பாற்றிக்காக**

**துக்கப் பாடற்பூசை**

11-9-72 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ்ப்பாணம் ஆசனக் கோவிலில் சங். சகோதரர் V. பேதுருப்பிள்ளை, அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். அவரது மாணவர்களும் அன்பர்களும் மேற்படி பூசையில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

**நாம் உலகத்தில் உயர்த்தியும், புகழ்த்தியும் பேச வேண்டியவள் அன்னையே. காரணம் அங்குதான் நாம் அன்பையும், தூய்மையையும், தியாகத்தையும் அதிகமாக எதிர்பார்க்கிறோம்.**

---

**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்**

நாள்: 10-9-72.
நேரம்: மாலை 7-00
பொருள்:
"தேய்ந்த நிலவு"
(ஒலிச் சித்திரம்)
வழங்குபவர்: மறைத்திரு அகுஸ்ரீன் யோசெவ் வாஸ், அ. ம. தி

*　　*　　*

நேரம்: மாலை 7–23
"வினுவிடை"—இதழ் 1.
நடாத்துபவர்:
திரு. செல்வம், அ.ம.தி.

---

✠

**நாகேந்திரா ரேசம்மா**

அவர்களின்

## 1-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்: 26-5-1903

மறைவு: 12-9-1971

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ்நகர் பரி. கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இம்மாதம் 12-ந்தேதி செவ்வாய்க்கிழமையும், 16-ந்தேதி சனிக்கிழமையும் காலை 6-15மணிக்கு துக்கப் பாடல்பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும். அவ்வமயம் உறவினர், சிநேகிதர், குருமார், கன்னியர் அப்பலிபூசையில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி, சகோதரன்.

176/4, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

---

## உலக கிறிஸ்தவ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார். பரிசுத்த தந்தை இவருக்கு அனுப்பியிருக்கும் பாராட்டுச் செய்தியில் இவரது சேவையின் உன்னதநிலைமையைச் சுட்டிக்காட்டிக் கத்தோலிக்க திருச்சபையின் அயரா ஒத்துழைப்பை வாக்குப்பண்ணியிருக்கின்றார். மேலும் பதவியிலிருந்து நீங்கும் டக்றர் பிளேக் அடிகளார் செய்துவந்த மதிப்புள்ள செயல்கள் யாவுக்காகவும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார் பரிசுத்த தந்தை.

---

## பயணச் சீட்டு!

நாம் அனைவரும் நித்தியத்தை நோக்கிப் பயணம் செய்கின்றோம். ஒவ்வொருமணி நேரத்திலும் சுமார் ஐயாயிரத்துக்கு அதிகம்பேர் இறக்கின்றனர். அவர்கள் எல்லோரும் மோட்சத்துக்குள்போய்ச் சேரத் தங்கள் பயணச் சீட்டை வைத்திருக்கின்றார்களா? தேவ இஷ்டப் பிரசாதமே அப்பயணச்சீட்டு.

---

## கருதினல் லெகாரின் புதிய பதவி

முன்னாள் கனடாதேச மொன்றியோல் பிரிவு அதிமேற்றிராணியாராயிருந்து, 75 வயதானதும் தமது பதவியிலிருந்து ஓய்வு கேட்டுச் சிலவருடகாலமாக கமறூன் பிரதேசத்தில் வேதபோதக தொண்டில் ஈடுபட்டிருந்த கருதினல் லெகார் அடிகளாரைப் பாப்பரசர் ரோமாபுரிக்கழைத்து வேதபோதக காரியாலயத்தில் ஒரு விசேஷ தொண்டு செய்துவர உயர்பதவியில் அமர்த்தியுள்ளார். மொன்றியோல் பிரிவு அதிமேற்றிராணியாராயிருந்த காலத்திலும் வளர்ச்சியுறுதுள்ள நாடுகளின் வேதபோதக சேவை கருதினலடிகளாரை மிகவும கவர்ந்துள்ளது

---

**அன்புள்ள நண்பா! நீ தின்மையைப் பின்பற்றுமல் நன்மையைப் பின்பற்று. நன்மையைச் செய்கிறவன் சர்வேசுரனிடத்திலிருந்து வருகிறுன். தின்மையைச் செய்கிறவன் சர்வேசுரனைக் காணுதவன்" (3 அருளப். 1: 11**

---

## அன்னை பிறந்த....

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

நம்பி அவ்வன்னையைப் பின்சென்று நமது மூத்த சகோதரனுகிய யேசுவைப்போன்று நடந்து பாவத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெறும் அலுவலில் அவரோடு ஒத்துழைத்தல வேண்டும். நாம் தாயை நம்பி வாழ்ந்தால் அந்த நம்பிக்கை அவ்வன்னையின் பேரிலுள்ள அன்பை வளர்க்கும்.

பாம்பின் தலையை நசுக்கும் பணி வல்லமையுள்ள கன்னிகைக்கு உரியது. அப்பெண்மணியுடன் ஒன்றித்து இருப்பவர்கள் பாவத்தின்மீது வெற்றிகொள்ளும் வல்லமை பெறுகின்றனர். நாம் தேவதாயுடன் ஒன்றித்து வாழ்ந்தால் பாவத்தை வெல்லும் வல்லமையை அடைந்து கொள்வோம் என்பதற்கு ஐயமில்லை. ஆதலால் நாமும் நமது வாழ்விற் பாவவழிகளை நாடாது, தீமைதரும் வழிகளில் நின்றும் விலகி நல்வழிகளில் நடந்து தேவ அன்னையின மாசிலலாத இதயம் போன்று நமது இதயமும் தூய்மையுடன் இலங்கத் தேவ தாயை என்றும துதித்து வாழ்த்தி இரந்து அவ்வன்னையின் சலுகையைப் பெறுவோம். தேவதாயின் பிறப்பு இறைவனது அடியார்களுக்கு ஆன்ம இரட்சணியத்தின் ஆரம்பமாய் இருந்ததுபோன்று, அவ்வன்னையின் திருப்பிறப்பினை பக்தியுள்ள கொண்டாட்டமும் அவர்களது சமாதானத்தின் வளர்ச்சிக்குக் காரணமாய் இருக்க இறைவன் கிருபை செய்வார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஆ புரட்டாசி மாதம் 9-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org